SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – செல்வி.ஆ.கோமதி, இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், ஈரோடு – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (3ப) எண்.03

நாள்: 11.03.2022
பிலவ, மாசி – 27
திருவள்ளுவராண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.57744 /2017 / பி3, நாள்.03.12.2021.

******

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை உள்ள கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3.மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு, உதவி ஆணையர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றிய திரு.பொ.ஆறுமுகம் பணியிடையே 28.03.2017–ல் மரணமடைந்தார் எனவும், அன்னாரது மகளான செல்வி.ஆ.கோமதி என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆணையரது செ.மு.ந.க.எண்.67123–1/2016/பி3,



Scanned with Oken Scanner

நாள்.13.07.2018-ல் ஈரோடு உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 25.07.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், எனவே, செல்வி.ஆ.கோமதி என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 25.07.2018 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை, ஈரோடு, உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் செல்வி.ஆ.கோமதி என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 25.07.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண். 3596/க்யூ1/2022, நாள். 27.02.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
செல்வி.ஆ.கோமதி, இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் அலுவலகம், ஈரோடு
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

நகல்:-
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாவட்ட கருவூல அலுவலர், ஈரோடு.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/3/22
பிரிவு அலுவலர்

11/3/22